**சார்பு நீதிமன்றம், காங்கயம்.**

OS.No. 05/2020

PW – 2- திருக்குமரன்

தேதி : 19.02.2026

**சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. 2ம் வாதி என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். அவர் சொல்லி வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான், கணவன் மனைவிக்குள் பிரச்சனை உள்ளதும் தெரியும். அவர்களுக்கு குடும்ப ஏற்பாட்டின் பேரில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என் பெற்றோர்கள் உயிருடன் உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் சாட்சியமளிக்க வரவில்லை என்றால் அழைக்கவில்லை என்பதால் வரவில்லை. என் ஊருக்கும், பிரதிவாதியின் ஊருக்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ இருக்கும். திருமணத்திற்கு பின்னிட்டு 2ம் வாதி பிரதிவாதியின் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர்களது குடும்ப விவரம் பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் நான் சென்றிருந்த போதும் சண்டை வந்துள்ளதை பார்த்துள்ளேன்.

2. வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சொத்து, நகை கேட்டு வழக்கு போட்டுள்ளார். பிரதிவாதி என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்பதைதெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு சேர்த்து வைக்க நான் முயற்சி ஏதும் செய்தேனா என்றால் அவ்வாறு செய்தால் சகோதரி உயிருடன் இருக்க மாட்டார் என்பதால் அதற்கு முயற்சிக்கவில்லை. பிரதிவாதிக்கு எங்கு, எவ்வளவு சொத்து உள்ளது என்பது தெரியுமா என்றால் மங்களப்பட்டி கிராமத்தில் சுமார் 3 ஏக்கர் உள்ளது, சொத்தின் புல எண் தெரியாது. அந்த சொத்து அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பரம்பரை சொத்து. அதில் யார் யாருக்கு பங்கு உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் மற்றவர்களிடம் கையொப்பம் வாங்கி பிரதிவாதியின் பெயரில் தான் சொத்து உள்ளது.

3. விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. சேர்ந்து வாழும் எண்ணம் இல்லாமல் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று என் சகோதரி செயல்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல. அடித்து

கொடுமைப்படுத்தியதாக பிரதிவாதி மீது புகார் ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவர் எவ்வித தவறும் செய்யவில்லை என்பதால் தான் அவர் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ தற்போதும் தயாராக உள்ளார் என்றால் அது போன்ற சூழ்நிலை குடும்பத்திற்குள் இல்லை. 7 ஆண்டுகள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 7 வருட காலம் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்றால் சரியல்ல, அப்போதும் அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது. 7 வருடம் ஒன்றாக வாழ்ந்ததாக கூறிவிட்டு அதற்கு முரணாக 6 மாத காலத்தில் பிரச்சனை ஏற்பட்டுவிட்டதாக மாற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. 2010ல் திருமணம் நடந்தது. 2013ல் வீட்டை விட்டு அடித்து துரத்தியதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பெரியவர்களை வைத்து பேசி சமாதானம் செய்து சேர்ந்து வாழ வைத்ததாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் யார் என்றால் சாமிநாதன், குமார், நான், என் அப்பா ஆகியோர் சென்றோம். நான் சொல்வது போன்ற சமாதான பேச்சு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் சமாதானம் நடந்திருந்தால் என் அப்பா அல்லது மேற்கண்ட தனிநபர்கள் சாட்சியமளிக்க வந்திருப்பார்கள் என்றும் பொய் என்பதால் தான் அவர்கள் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சேர்ந்து வாழ பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், சொத்துக்களை அடைய வேண்டும் என்பதற்காக நானும் என் சகோதரியும் சேர்ந்து பொய்யான சங்கதிகளை கூறி வழக்கை நடத்தி வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்/கைரேகை செய்தார்.

S SANTHANA KRISNASAMY

Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2026.02.19 18:41:28 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.